**செய்தி வெளியீடு எண். 06** **நாள்: 03.01.2018**

## பள்ளி கல்வித்துறை சார்பாக தமிழக பள்ளி கலைத்திருவிழா - கலையருவி போட்டிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்

திருவள்ளூர் மாவட்டம், மணவாளநகர், கிரைஸ்ட் கிங் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் பள்ளி கல்வித்துறை சார்பாக தமிழக பள்ளி கலைத்திருவிழா - கலையருவி போட்டிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (03.01.2018) குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

தமிழக பள்ளிக் கலைத்திருவிழா நூற்றுக்கும் மேற்பட்ட கலை வடிவங்களில் மொழியாற்றல், பாரம்பரியம், செவ்வியல், நவீனம், ஆன்மீகம், கலாச்சாரம், கிராமியம் நாட்டுப்புறம் ஆகிய பல்வேறு பிரிவுகளில் முதல் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலக்கூடிய மாணவர்களிடையே அவர்தம் தனித் திறனையும், குழுத்திறனையும் வளர்த்துக்கொள்வதற்கான போட்டிகளைத் தொடக்க நிலை, நடுநிலை, மேல்நிலைப் பள்ளிகள் என நான்கு பிரிவில் நடத்தி அவற்றில் முதலிடம் பெறுவோர்க்கு ஒன்றியம், கல்வி மாவட்டம், மாவட்டம், மாநிலம் ஆகிய அடுத்தடுத்த நிலைகளில் தரமுடன் கூடிய திறனை வெளிப்படுத்துவோருக்கு அங்கீகாரமும், பாராட்டும், பரிசும் தமிழக அரசால் வழங்கப்படவுள்ளது.

இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியதாவது :

மாணவ, மாணவியர்களின் கலைத் திறனை வெளிப்படுத்தும் வகையில் தமிழ்நாடு அரசு சார்பில் பள்ளி கலைத்திருவிழா கல்வி மாவட்டந்தோறும் நடத்தப்பட்டு வருகிறது. மாணவர்களின் நலனில் அக்கறை கொண்ட தமிழக அரசு, கல்வித்திறனை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் மாணவர்களின் நுண் கலைத்திறனை வெளிப்படுத்தும் வகையில் இத்தகைய கலைத்திருவிழா போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது.

மாணவ, மாணவியர்களின் கலைத்திறனை வெளிகொணரும் வகையில் திருவள்ளூர் மாவட்டத்தில் கருவி இசை – தோற் கருவி, இசைச் சங்கமம், நடனம், கருவி இசை – துளை காற்றுக் கருவி, கருவி இசை - தந்திக் கருவி, நாடகம், கவின் கலை / நுண்கலை, இசை (வாய்ப்பாட்டு), மொழித்திறன் போன்ற போட்டிகள் கல்வி மாவட்ட வாரியாக 03.01.2018 முதல் 05.01.2018 வரை பொன்னேரி கல்வி மாவட்டத்தில் 3 மையங்களிலும், திருவள்ளூர் கல்வி மாவட்டத்தில் 3 மையங்களிலும் ஆக மொத்தம் 6 மையங்களில் போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது. மாணவ, மாணவியர்களின் கற்கும் திறன் இதன் மூலம் மேம்படுகிறது. இந்த வாய்ப்பினை பயன்படுத்தி மாணவ, மாணவியர் தங்களது தனித்திறமைகளை வளர்த்துக்கொண்டு கலைத்திறன்களை சிறப்பான முறையில் வெளிப்படுத்த வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்.

பொன்னேரி கல்வி மாவட்டத்தில் 2,809 மாணவ / மாணவியர்களும் திருவள்ளூர் கல்வி மாவட்டத்தில் 1,778 மாணவ / மாணவியர்களும் ஆக மொத்தம் 4,587 மாணவ / மாணவியர்கள் போட்டிகளில் பங்குபெறவுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனைவர்.த.இராஜேந்திரன், மாவட்ட கல்வி அலுவலர் திரு.நி.குமாரசாமி, திருவள்ளூர் வட்டாட்சியர் திரு.தமிழ்செல்வன், மெட்ரிக் பள்ளி ஆய்வாளர் திரு.எஸ்.அருட்செல்வன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**